# வென்று வருவாய் என்றிருந்தேன்; சென்று விட்டாயே என் செல்வமே!



தேன் மணக்கும் திருக்குவளையில் மொட்டாகி, தமிழ் மணக்கும் திருவாரூரில் கண் மலர்ந்த என் செல்வமே! நீ பின்னிய சிலந்தி வலையில், எதிரிப்புழுக்கள் அல்லவா வந்து வீழ்ந்தன; அந்த எமன் பின்னிய வலையில் நீ எப்படி விழுந்தாய்! நிலத்துக்குச் சுமையாகச் சில சோற்றுப் பைகள் வாழ்ந்திருக்க, பகல் இரவு பாராமல் முரசை ஒலித்துக் கொண்டிருந்த உன்னிடத்தில் கூற்றுவனால் எப்படி வந்து குந்த முடிந்தது? ஆபாட்ஸ்பரி மணக்கோலத்தில் கண்ட என் கண்கள், கண்ணாடிப் பேழையில் கண்டபோது, மீண்டும் என் கண்கள் கமலாலயக் குளத்தின் நீர் மட்டத்தை உயரச் செய்தன.

திருவாரூர் போர்டு உயர்நிலைப்பள்ளியில் ஆறாம் வகுப்பிலிருந்து பதினொன்றாம் வகுப்பு வரை ஒன்றாக அமர்ந்து செவிச் செல்வத்தைப் பெற்றோமே. அப்படி அமர்ந்திருந்த ஆசனங்கள் கூடத் தேய்ந்து போய் இருக்காது; அப்படியிருக்கையில் உன் சிம்மாசனம் மட்டும் சாய்ந்தது ஏன்? மதிய உணவு கொண்டு வரா ததுபோது, பள்ளியின் பக்கத்திலிருந்த சங்கரையா; ஹோட்டலில் பயத்தம் பருப்புக் கஞ்சியை வாங்கிக் குடித்துக்கொண்டு, கணித வகுப்பில் அரைத் தூக்கத்தில் அயர்ந்திருந்ததை, என்னால் இன்னும் மறக்க முடியவில்லை!

தமிழ் வாசனையும் எழுத்தும் படைப்பும், மனித ஆயுளை நீட்டும் என்றார்களே. அந்தத் தமிழ் ஏன் உன் உயிரை நீட்டவில்லை. 'விழித்திருந்தால் உன்னைப் பிடிக்க முடியாது" என்று எண்ணிய எமன், நித்திரையிலேயே உன் யாத்திரைக்குச் சுத்துப் போட்டானோ? எதிலும் அவசரப்படாமல் கடமையாற்றிய உன்னைக் காலன் அவசரப்பட்டுச் செயல்பட்டது ஏன்? காலன் அவசரப்பட்டுவிட்டானா அல்லது கடமை யாற்றியது போதும் என்று நீ அவசரப்பட்டு விட்டாயா?

'முரசொலியில் முத்தமிழறிஞர் கலைஞரின் கடிதங்களைப் படித்து நாள் ஆயிற்றே. அதனை நேரில் சென்று வாங்கி வரலாம் எனப் புறப்பட்டாயா? அல்லது கத்தால் முரசொலி மாறன் அவர்கள் நிகழ்த்திய பொருளியல் சொற்பொழிவின் மூலத்தைப்பெற்று வந்து, அதனைத் தமிழில் மொழிபெயர்த்து முரசொலியில் வெளியிடலாம் என விரைந்தாயா! பரிதி இளம் பரிதியின் தணிக்கை செய்யப்பட்ட பேச்சை முரசொலியில் வெளியிட்டதற்காகப் பேரவைத் தலைவர் கூண்டில் ஏற்றினாரே, அந்தச் செய்தி அவ்வுலகத்திலும் எட்டியிருக்கிறதா எனப் பார்க்கச் சென்றாயோ? அல்லது அந்த உலகத்திலாவது கருத்துச் சுதந்திரம் இருக்கிறதா எனக் கணிக்கச் சென்றாயோ? அல்லது அரசு ஊடகத்தாலும் அரசாங்க மாளிகையாலும், தமிழ்த்தாய் வாழ்த்துக் கொச்சைப்படுத்தப்படுவதைக் காண வேண்டாம் என்று பயணப்பட்டாயா? பேரிடர்க் காலத்தில் இளைய தளபதி (துணை முதல்வர்) ஊனையும் உறக்கத்தையும் மறந்து, துறந்து அணிலைப்போலவும் தேனீயைப் போலவும் செயல்படுவதை, அங்கிருந்து பார்க்கலாம் எனப் புறப்பட்டாயா?



பேராசிரியர்
**தி.ராஜகோபாலன்**
கல்வியாளர்

குலக்கல்வியை எதிர்த்தும், தேவி குளம் பீர் மேட்டை மீட்பதற்கும், கழக உயர்நிலைப் பள்ளியின் வாசலில் நடந்த மறியல் போராட்டத்தில் நீ சிங்கமெனக் கர்ஜித்தாயே, அதனை ஒதுங்கி நின்று பார்த்தவன் நானல்லவா! அதனை நான் பதிவு செய்யாமல் போனால், வரலாறு என்னை மன்னிக்காது. நம்மிருவர்க்கும் வகுப்பாசிரியராக அமைந்த திரு.பி.சி. கணேசன் அவர்கள். ஆங்கிலத்தின் அவசியத்தைக் கற்பித்ததோடு, கழக வரலாற்றையும் இலைமறைவு காய்மறைவாகக் கற்பித்ததைக்கேட்டு, நம்முடைய செவிப்புலன்கள் மடங்கி விரிந்ததைப் பெங்களூரில் சந்தித்த போதெல்லாம் பரிமாறிக் கொண்டதை நான் இன்னும் மறக்கவில்லை. மாலை நேரங்களில் பள்ளி மைதானத்தில் கபடி ஆடிய பொழுதுகளில், ஒருநாள் என் காலில் சுளுக்கு ஏற்பட்டபொழுது, அதனை நீ வழித்தெடுத்தது இன்னும் என் நெஞ்சில் பசுமையாக நிற்கிறது. நம்மிருவரின் நண்பன் கள்ளத்தெரு ஜெயக்குமார், இதனைச் சொல்லிச் சொல்லி மகிழ்வான்.

விடுமுறை நாட்களில் சந்நதித் தெருவிலிருந்த நீங்கள், கமலாலயத்தின் மேல்கரைக்கு வந்துவிடுவீர்கள். நான் முதலியார் தெருவிலிருந்து குளத்தின் கீழ்க்கரைக்கு வந்துவிடுவேன். மேல்கரையிலிருந்து கீழ்க்கரைக்கு ஒரே முயற்சியில் சென்றடைய முடியாது. அதனால் நீங்கள் மேல்கரையிலிருந்து நடுவுனாம் கோயிலுக்கு வந்துவிடுவீர்கள்; நான் கீழ்க்கரையிலிருந்து, நடுவுனாம் கோயிலுக்கு வந்து விடுவேன். இருவரும் அங்குச் சந்தித்து, அக்கோயிலில் இருந்த வாழை மரங்களிலிருந்து பழங்களைப் பறித்துத் தின்றுவிட்டு, மறுபடியும் எதிர்த்திசைகளில் நீந்தி கரையை அடைவோம். திருக்குளத்தில் நீராடிய பொழுது, வயதுக்கேற்றபடி கண்ட காட்சிகள், என் மனத்திரையில் நிழலாடுகின்றன. படித்துறையில் அமர்ந்தபடி, அலைகளைக் காலால் எட்டி உதைத்து, ஒருவர் மேல் ஒருவர் தண்ணீரை அள்ளி வீசிய காட்சிகளும் கண் முன் நிற்கின்றன.

விடுமுறை நாட்களில் பெரிய கோவிலுக்குச் சென்று பந்து விளையாடுவோம். நமக்கு அப்பொழுது கிரிக்கெட் மட்டையோ, ஹாக்கி மட்டையோ கிடையாது. ஒரேயொரு டென்னிஸ் பந்து. அதனைப்பெரிய கோயில் பெரிய மதில் சுவற்றில், நானும் நீங்களும் மாறி மாறி அடித்து மகிழ்வோம். அதனைக் கோயில் வளாகத்தில் நடைபயிலும் அண்ணன் அமிர்தம் அவர்களும், அவருடைய நண்பர் சின்னய்யன் அவர்களும் பார்த்துக்கொண்டே செல்வார்கள். தப்பித் தவறி அந்தப் பக்கம் கு.தென்னன் அவர்கள் வந்தால், வாலைச் சுருட்டிக்கொண்டு அப்பாவியாக ஆகிவிடுவோம். அவ்வாறே பெரியவர் C.D.M. அவர்களைச் சந்திக்க நேர்ந்தால் பெட்டிப் பாம்பாக அடங்கி விடுவோம்.

திருவாரூரில் நகராட்சி நூல் நிலையம் மட்டுமே இருந்தது. அதில் செய்தித் தாள்கள் வருமே தவிர, புத்தகங்கள் கிடையாது. நூலோர்கள் இருந்தார்கள்; ஆனால் நூல்கள் இல்லை. ஆனால் அடியக்க மங்கலத்தில் (நான்கு மைல் தொலைவு) மதூதியை ஒட்டி, ஒரு நூலகம் இருந்தது. அதில் மு.வ.வின் நாவல்கள், எஸ். எஸ். தென்னரசு எழுதிய கதைகள், தத்துவமேதை டி.கே. சீனிவாசன் அவர்களின் கதைகள், அப்துல் ரஹீம் அவர்களுடைய அறிவார்ந்த நூல்கள். அறிஞர் அண்ணாவின் கலைஞரின் கதைகள் இருந்தன. நானும் நீங்களும் ஒரு வாடகை சைக்கிள் எடுத்துக்கொண்டு, அந்த நூலகத்திற்குச் சென்று ஒரு வாரத்திற்குத் தேவையான நூல்களை எடுத்து வந்து, அதனை நாம் முறை வைத்து மாறி மாறிப் படித்து விட்டு, மறுவாரம் அடியக்கமங்கலம் சென்று ஒப்படைப்போம். அங்கிருந்து கலைஞரின் 'நச்சுக் கோப்பை" என்ற நாடகத்தை எடுத்து வந்து, வள்ளுவர் படிப்பகத்தின் சார்பில் நடகமாகப் போட்டேன். அதில் நான் 'சாந்தா"வாக பெண்வேடம் போட்டேன். அதில் நீங்கள் பார்வையாளராக இருந்தீரே தவிர, பாத்திரமாகவில்லை.

நாம் இருவரும் வீட்டுக்குத் தெரியாமல், நாகபட்டினத்திற்குச்சென்று (ஒரே சைக்கிளில்) புதுப்படங்களைப் பார்த்து வருவது வழக்கம். நாகையில்தான் பெரும்பாலும் புதுப்படங்கள் திரையிடப்படும். ரத்தக்கண்ணீர், பராசக்தி, மனோகரா போன்ற திரைப்படங்களை அங்குதான் பார்த்தோம். அங்கு விற்கும் வசனப் புத்தகங்களை வாங்கி வந்து, சந்நதித் தெருவுக்குப் பக்கத்தில் கல்தேர்முட்டிப் பள்ளிக்கூடம் ஒன்றிருந்தது. அதில் தான் சின்னகுத்தூசியார் ஆசிரியராக இருந்தார். விடுமுறை நாட்களில் அந்தப் பள்ளிக்கூடத்தில் அமர்ந்து, பராசக்தி வசனங்களையும் மனோகரா வசனங்களையும் நெட்டுரு போடுவோம். அதில், மனோகரா படத்தில் புருசோத்தமன் அவையில், சங்கிலியால் கட்டப்பட்ட மனோகரன், 'குற்றமென்ன செய்தேன், கொற்றவனே! கலிங்கத்துப்பரணியை மறைக்க வந்த காரிருளே! புறநானூற்றை மறைக்க வந்த புழுதிக்காற்றே" எனப் பேசும் வசனங்கள் உங்களுக்கு மனப்பாடம். சட்டப்பேரவையில் குற்றக்கூண்டில் நிற்கும்போது, உங்களுக்கு மனோகரா வசனம் நினைவு வந்திருக்க வேண்டும். அங்கு நீங்கள் கருத்துச் சுதந்திரத்திற்காகச் செய்த வீர முழக்கம், எனக்கு அந்தப் பழைய நினைவை மறுபடியும் பதியமிட்டது.

பத்தாம் வகுப்புப் படிக்கின்றபோது, புறநானூற்றில் 'தொடித்தலை விழுத்தண்டு ஊன்றியனார்" எனும் முதுபெரும்புலவர் பாடிய பாடல் ஒன்று, சிறப்புத் தமிழில் பாடமாக இடம் பெற்றிருந்தது. அந்தப் புலவர் தம்முடைய எண்பதாவது வயதில், தாம் வருத்தப்படாத வாலிபராக இருந்தபொழுது நடத்திய அனுபவங்களை எல்லாம் சுவைபடச் செதுக்கியிருந்தார். அதனைப் புலவர் இரத்தின தேசிகர் அவர்களும் நமக்குக் கிளுகிளுப்பு ஏற்படும்படியாக நடத்தினார். இளமைக் காலத்தில் கன்னிப் பெண்களைக் கவருவதற்காக ஆற்றங்கரையிலுள்ள மரத்தின் உச்சிக்குச் சென்று 'தொப்பென்று" குதித்து மண்ணை அள்ளிக் காட்டியதாகப் பாடுகின்றார்.

திருவாரூரில் துர்காலயா சாலையில் 'அம்மா தோப்பு" எனும் பெயரில் ஒரு பெரிய தோப்பு இருந்தது. அது திருவாரூர் தியாகேசப் பெருமானுக்குச் சொந்தமானது. மாவடு காய்க்கும் பருவத்தில் நானும், நீங்களும் நண்பர் ஜெயக்குமாரும் அந்தத் தோப்புக்குச் சென்று விடுவோம். வீட்டிலிருந்து உப்பினை மடித்து எடுத்துக்கொண்டு, தோப்புக்குள் நுழைந்து விடுவோம். அங்கு நாவற்பழங்கள் பழுத்துத் தொங்கும்; கிளாக்காய்கள் காய்த்துத் தொங்கும். நாங்கள் நாவற்பழங்களைப் பறித்து அவற்றின் மீது உப்பினைத் தூவித் தின்போம். கிளாக்காய்களையும் மாவடுக்களையும் உப்பில் தொட்டுக் கொண்டு உண்போம். ஜீரணிப்பதற்காக அருகில் ஓடிக்கொண்டிருக்கும் ஓடம்போக்கி ஆற்றில், கண்கள் சிவக்கும் வரையில் நீச்சலடித்துவிட்டு வீடு திரும்புவோம். இன்றைக்கு அங்குத் திருவாரூர் தியாகேசன் இருக்கிறார், அம்மாத்தோப்பு மட்டும் இல்லை. தொடித்தலை விழுத்தண்டு ஊன்றிய புலவரின் அனுபவத்தை நாம் மூன்று பேர்களாவது பகிர்ந்து கொண்டோம்.

இப்படியாக நமது ஆறு வருடக்கால வாழ்க்கைக் கழிந்தது. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு முடிந்தவுடன், கல்லூரிப் படிப்புக்காகக் கலைஞர் அவர்கள் உங்களைச் சென்னைக்கு அழைத்துக்கொண்டார். நான் கல்லூரிக் கல்விக்காக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்றுவிட்டேன். சென்னைக்குச் சென்ற நீங்கள் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தில், துரைமுருகன், ஆலடி அருணா போன்றோருடன் இணைந்து, மாணவர் போராட்டங்களைத் திறம்பட நிகழ்த்தினீர்கள். மாணவர் கழக மாநாட்டிற்குத் தலைவர் கலைஞர் அவர்களிடமே எழுதிக்கொடுத்துக் கடன் வாங்கிக்கொண்டு நிகழ்ச்சிகளை நடத்தினீர்கள். யான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தி.மா.மு.க. தலைவர் எஸ்.டி.சோமசுந்தரம் அவர்களுடைய தலைமையில், கழகப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டேன்.

திருவாரூரிலிருந்து இருவரும் வேரறுந்த பின்னர், நமது சந்திப்பு எப்பொழுதாவது நேர்ந்தது.



தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் 19.10.2024 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள அரசு மணிமண்டபத்தில் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களின் திருவுருவச்சிலை, நீதிக்கட்சியின் வைரத்தூண் சர்.ஏ.டி. பன்னீர் செல்வம் அவர்களின் திருவுருவச்சிலை, ஏழிசை மன்னர் தியாகராஜ பாகவதர் அவர்களின் திருவுருவச்சிலை ஆகியவற்றிற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, மணிமண்டப வளாகத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் ராஜாராமன். மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், எம்.பழனியாண்டி, அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## மக்கள் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும்
# நாடுகளில் இந்தியா முதலிடம் என்பது காலக்கொடுமை!

### 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, அக். 21-
மக்கள் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் நாடுகளில் இந்தியா முதலிடம் என்பது காலத்தின் கொடுமை என்று 'தினகரன' நாளேடு தலையங்கத்தில் விமர்ச்சித்துள்ளது.

இதுகுறித்து அக். 20 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறியுள்ளதாவது:-



தினகரன்
காலக்கொடுமை

வறுமையை ஒழிப்பதற்கான முயற்சிகளை உலக நாடுகள் அனைத்தும் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. அதேபோல் வறுமையின் தாக்கம் நீடிக்கும் நாடுகள் குறித்த பல்வேறு தகவல்களும் வெளியிடப்பட்டு வருகிறது.

இந்தவகையில் தற்போது ஐக்கிய நாடுகளின் வளர்ச்சி திட்டம் மற்றும் ஆக்ஸ்போர்டு மனித வறுமைமனிதவள மேம்பாட்டு அமைப்பு புதிய ஆய்வு முடிவு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், "உலகளவில் போர் மற்றும் அமைதியின்மை நிலவும் நாடுகளில் வசிக்கும் 45.50 கோடி மக்கள் வறுமையில் சிக்கியுள்ளனர். இது மொத்த மக்கள் தொகையில் 40 சதவீதமாகும். இவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் 18 வயதுக்கு உட்பட்டவர்கள். உலகளவில் 27.9 சதவீதம் குழந்தைகள் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள னர். உலகளவில் 112 நாடுகளில் வசிக்கும் 630 கோடி பேரில் 110 கோடி மக்கள் வறுமையின் பிடியில் சிக்கியுள்ளனர்," என்று அதிர்ச்சி தகவலை தெரிவித்துள்ளது.

மேலும், "இந்தியாவை பொறுத்தவரை 23.40 கோடி மக்கள் வறுமையின் கோரப்பிடியில் சிக்கி யுள்ளனர். இதற்கு அடுத்த படியாக பாகிஸ்தானில் 9.30 கோடி மக்களும், எத்தியோப்பியாவில் 8.60 கோடி மக்களும், நைஜீரியாவில் 7.40 கோடி மக்களும், காங்கோ நாட்டில் 6.60 கோடி மக்களும் வறுமையின் பிடியில் சிக்கி யுள்ளனர்." என்றும் ஆய்வுகள் தெரிவித்துள்ளது. இதன்படி வறுமையின் தாக்கம் அதிகமுள்ள நாடுகளில் இந்தியா முதலிடத்தில் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இது நாடு முழுவதும் பெரும் அதிர்வுகளோடு பல்வேறு கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

உலக வங்கியின் கூற்றுப்படி வறுமை என்பது முதலில் பசியை குறிக்கிறது. அதே நேரத்தில் இது ஆபத்தான பணிச்சூழல்கள், பாதுகாப்பற்ற வீடுகள், சத்தான உணவு பற்றாக்குறை, நீதிக்கான சமத்துவமின்மை, சுகாதார பாதுகாப்புக்கு மட்டுப்படுத்தப்பட்ட அணுகல், பட்டினிப் பிரச்சினைகள், வீடற்ற தன்மை, அடிப்படை வசதிகள் இல்லாமை என்று அனைத்திற்கும் அடிப்படையாக இருக்கிறது வறுமை. இவை அனைத்தையும் கணக்கிட்டு முழுமையாக ஆய்வு செய்த பிறகே வறுமை பட்டியல் வெளியிடப்படுகிறது.

இந்த கணக்கீட்டின் படி பசியில் மட்டுமல்ல. பல்வேறு நிலைகளிலும் 23.40 கோடி இந்திய மக்கள் பின் தங்கி நிற்கின்றனர் என்பது அம்பலமாகியுள்ளது. அடிப்படை வசதிகள் அனைத்திலும் நாடு விஞ்ஞானத்திலும், தொழில் வளர்ச்சியிலும் அசுர வேகத்தில் வளர்ந்து வருகிறது. நவீன கட்டமைப்புகள், கண்டுபிடிப்புகள், சாதனைகள் என்று அனைத்திலும் சாதனை படைத்து வருவதாக ஒன்றிய ஆட்சியாளர்கள் தினமும் வெளியிடும் அறிக்கைகள் அணிவகுத்து நிற்கிறது. கடந்த 9ஆண்டுகளில் வறுமையின் விகிதமானது 18 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது என்று அரசாங்க சிந்தனைக் குழுவான நிதி ஆயோக் அறிக்கை தெரிவித்துள்ளது.

ஆனாலும் மக்கள் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் நாடுகளில் முதலிடத்தில் இந்தியா என்பது தான் காலக்கொடுமை. வறுமை என்பது நிதி ஆதாரங்களின் பற்றாக்குறை மட்டுமல்ல. மனிதர்களின் கண்ணியத்தை வறுமை சிதைக்கிறது. வாய்ப்புகளை வரம்பிடுகிறது. துன்பத்தின் சுழற்சியை நிலைநிறுத்துகிறது. இதை கருத்தில் கொண்டே 'வறுமை என்பது வன்முறையின் மோசமான வடிவம்' என்றார் தேசத்தந்தை மகாத்மா காந்தி.

மதத்திற்காக கோட்சேவை தூக்கிப்பிடிக்கும் ஆட்சியாளர்கள், மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காக மகாத்மாவின் சிந்தனை குறித்தும் சிந்திக்க வேண்டும். அப்போது தான் இந்தியாவில் வறுமை என்னும் இருள்விலகும். மக்களின் வாழ்க்கை தரமும் உண்மையாக ஒளிரும் என்பதே நிதர்சனம்.

இவ்வாறு தலையங்கத்தில் கூறியுள்ளது.

## தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு!
# முதல்வருக்கு - தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வூதியர்கள் சங்கம் நன்றி!
### சங்கத் தலைவர் ஜெ.கணேசன் – செயலாளர் கி.தயாளன் அறிக்கை!

சென்னை, அக். 21-
தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படியினை உயர்த்தி அறிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வூதியர்கள் சங்கத்தின் சார்பில், அதன் தலைவர் ஜெ.கணேசன், செயலாளர் கி.தயாளன் ஆகியோர் தங்கள் சங்கத்தின் நன்றியினைத் தெரிவித்து முதல்வருக்குக் கடிதம் எழுதியுள்ளார்கள்.

அது வருமாறு:-

தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வூதியங்கள் சங்கத் தலைவர் ஜெ. கணேசன், செயலாளர் கி.தயாளன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நமது இந்தியத் திருநாட்டில் திராவிடத்தின் சமத்துவ கொள்கையினை நாடு முழுவதும் பரப்பிட அல்லும் பகலும் சூறாவளியாக சுழன்று முழுமூச்சாக பாடுபடும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வூதியர்கள் சங்கத்தின் சார்பான பணிவான வாழ்த்துக்கள்.

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்ந்து வலியுறுத்திவரும் கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்து, எதிர்வரும் காலங்களில் ஒன்றிய அரசு அகவிலைப்படி உயர்வை உயர்த்தி அறிவிக்கும்போதெல்லாம், உடனுக்குடன் தமிழ்நாடு அரசும் அதைப் பின்பற்றி அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர்களுக்கும் அகவிலைப்படி உயர்வு செயல்படுத்தப்படும் என்று ஏற்கனவே வெளியிட்ட அறிவிப்பினை தொடர்ந்து, தற்போது 50 சதவீதமாக உள்ள அகவிலைப் படியை 01.07.2024 முதல் 53 சதவீதமாக உயர்த்தி வழங்கிட முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்ற தாரக மந்திரத்தை அடிப்படையாக கொண்டு இயங்கிவரும் தமிழ்நாடு அரசு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக 16 இலட்சம் தமிழ்நாடு அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் அவர்கள் மனம் குளிரும் வண்ணம் இன்று (18.10.2024) முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்,

மேலும் இதனால் ஆண்டு ஒன்றுக்கு 1931 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும் எனினும், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் நலன் கருதி இதற்கான கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும் என்றும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

மேற்படியான வெளியிட்டமைக்கு இனிய அறிவிப்பினை முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வூதியர்கள் சங்கத்தின் சார்பான இதயங்கனிந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**

பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்ட நிகழ்ச்சி பற்றிய அறிவிப்பு

(தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 அத்தியாயம் - 4, பகுதி - 1 விதி எண்.156 (1)ன் கீழ்)

**2024- ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29ஆம் நாள் செவ்வாய்கிழமை காலை 10.00 மணிக்கு, மாநகராட்சி மன்ற கூடத்தில் மாமன்ற சாதாரண கூட்டம் நடைபெற உள்ளது. மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**மேயர்**

செ.ம.தொ.இ / 1061 / வரைகலை / 2024




இராயபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 50வது வார்டில் அமைந்துள்ள எஸ்.என். செட்டி தெருவில் உள்ள உணவு கூடத்தில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் காலை உணவின் தரத்தை சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி உணவு தயாரிக்கும் கூடத்திற்கு சென்று ஆய்வு செய்து மக்களுக்கு வழங்கினார். இராயபுரம் பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், வட்ட செயலாளர்கள் கிருஷ்ணன், ஆர்.வி.கணேஷ், காட்டன் சதீஷ்குமார், சென்னை மாநகராட்சி பிரபுதாஸ், சுகாதார ஆய்வாளர் செந்தில்குமார், மாவட்ட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.